# கோயில் எனப்படும் சிதம்பரம் - தில்லைத் திருச்சிற்றம்பலம் மீது மூவர் அருளிய தேவாரப் பதிகங்கள்.

## திருஞானசம்பந்தர் அருளியவை

ஆடினாய் நறுநெய்யொடு பால் தயிர், அந்தணர் பிரியாத சிற்றம்பலம்
நாடினாய் இடம் மாநறுங்கொன்றை நயந்தவனே!
பாடினாய் மறையோடு பல்கீதமும், பல்சடைப்பனி கால் கதிர் வெண்டிங்கள்
சூடினாய் அருளாய் சுருங்க எம் தொல்வினையே!

கொட்டமே கமழுங்குழலாளொடு, கூடினாய் எருது ஏறினாய் நுதல்
பட்டமே புனைவாய் இசை பாடுவ பாரிடமா
நட்டமே நவில்வாய் மறையோர் தில்லை, நல்லவர் பிரியாத சிற்றம்பலம்
இட்டமா உறைவாய் இவை மேவிய தென்னை கொலோ?

நீலத்தார் கரிய மிடற்றார் நல்ல நெற்றி மேல் உற்ற கண்ணினார் பற்று
சூலத்தார் சுடலைப் பொடி நீறணிவார் சடையார்
சீலத்தார் தொழுதேத்தும் சிற்றம்பலம்
சேர்தலாற் கழல் சேவடி கைதொழக்
கோலத்தாய் அருளாய் உன காரணங்கூறுதுமே!

கொம்பலைத்து அழகெய்திய நுண்ணிடைக் கோல வாண்மதி போல முகத்திரண்
அம்பலைத்த கண்ணாள் முலைமேவிய வார்சடையான்
கம்பலைத்தெழு காமுறு காளையர், காதலால் கழல் சேவடி கை தொழ
அம்பலத்துறைவானடியார்க்கு அடையா வினைகளே!

தொல்லை ஆரமுதுண்ண நஞ்சுண்டதோர் தூமணி மிடறா, பகு வாயதோர்
பல்லையார் தலையில் பலியேற்றுழல் பண்டரங்கா,
தில்லையார் தொழுதேத்தும் சிற்றம்பலஞ் சேர்தலாற் கழல் சேவடி கை தொழ
இல்லையாம் வினை தான் எரியம் மதில் எய்தவனே!

ஆகம் தோயணி கொன்றையாய் அனல் அங்கையாய் அமரர்க்கு அமரா உமை
பாகம் தோய் பகவா பலி ஏற்றுழல் பண்டரங்கா
மாகந்தோய் பொழில் மல்கு சிற்றம்பலம்
மன்னினாய் மழுவாளினாய் அழல்

நாகம் தோய் அரையாய், அடியாரை நண்ணா வினையே!

சாதியார் பளிங்கின்னொடு வெள்ளிய சங்கவார் குழையாய் திகழப்படும்
வேதியா விகிர்தா விழவாரணி தில்லை தன்னுள்
ஆதியாய்க்கு இடமாய சிற்றம்பலம்
அங்கையால் தொழ வல்லடியார்களை
வாதியாது அகலும் நலியா மலி தீவினையே!

வேயினார் பணைத் தோளியோடு ஆடலை
வேண்டினாய் விகிர்தா உயிர்கட்கு அமுதாயினாய்
இடுகாட்டு எரி ஆடலமர்ந்தவனே!
தீயினார் கணையாற் புரம் மூன்று எய்த
செம்மையாய் திகழ்கின்ற சிற்றம்பலம்
மேயினாய் கழலே தொழுது எய்துதும் மேல் உலகே!

தாரினார் விரிகொன்றையாய் மதி தாங்கு நீள்சடையாய்
தலைவா! நல்ல தேரினார் மறுகிற்றிருவாரணி தில்லை தன்னுள்
சீரினால் வழி பாடொழியாததோர் செம்மையால் அழகாய சிற்றம்பலம்
ஏரினால் அமர்ந்தாய் உன் சீரடி ஏத்துமே!

வெற்றரை உழல் வார்துவராடைய வேடத்தாரவர்கள் உரை கொள்ளன்மின்
மற்றவருலகின் அவலம் அவை மாற்றகில்லார்
கற்றவர் தொழுது ஏத்தும் சிற்றம்பலம்
காதலால் கழல் சேவடி கை தொழ
உற்றவர் உலகின் உறுதி கொள வல்லரே!

நாறு பூம்பொழில் நண்ணிய காழியுள்
நான்மறை வல்ல ஞானசம்பந்தன்
ஊறுமின் தமிழால் உயர்ந்தார் உறை தில்லை தன்னுள்
ஏறு தொல்புகழேந்து சிற்றம்பலத்து
ஈசனை இசையால் சொன்ன பத்தினை
கூறுமாறு வல்லார் உயர்ந்தாரொடும் கூடுவரே!

திருச்சிற்றம்பலம்!

கற்றாங்கு எரி ஓம்பிக் கலியை வாராமெ
செற்றார் வாழ் தில்லைச் சிற்றம்பலம் மேய
முற்றா வெண்டிங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரை பற்றா பாவமே!

பறப்பைப் படுத்து எங்கும் பசு வேட்டெரி ஓம்பும்
சிறப்பர் வாழ் தில்லைச் சிற்றம்பலமேய
பிறப்பில் பெருமானைப் பின்தாழ் சடையானை
மறப்பிலார் கண்டீர் மையல் தீர்வரே!

மையார் ஒண் கண்ணார் மாட நெடுவீதிக்
கையாற் பந்தோச்சும் கழிசூழ் தில்லையுள்
பொய்யா மறை பாடல் புரிந்தான் உலகேத்தச்
செய்யான் உறை கோயில் சிற்றம்பலம் தானே!

நிறைவெண் கொடி மாட நெற்றி நேர் தீண்டப்
பிறை வந்து இறைத்தாக்கும் பேரம்பலம் தில்லைச்
சிறை வண்டறை ஓவாச் சிற்றமபலமேய
இறைவன் கழலேத்தும் இன்பம் இன்பமே!

செல்வ நெடுமாடம் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ் தில்லைச் சிற்றம்பலமேய
செல்வன் கழல் ஏத்தும் செல்வம் செல்வமே!

வருமாந்தளிர் மேனி மாதோர் பாகமாந்
திருமாந் தில்லையுள் சிற்றம்பலமேய
கருமான் உரி ஆடைக் கறைசேர் கண்டத்து எம்
பெருமான் கழல் அல்லால் பேணாது உள்ளமே!

அலையார் புனல்சூடி ஆகத்து ஒருபாக
மலையான் மகளோடு மகிழ்ந்தான் உலகேத்தச்
சிலையால் எயில் எய்தான் சிற்றம்பலம் தன்னைத்
தலையால் வணங்குவார் தலையானார்களே!

கூர்வாளரக்கன் தன் வலியைக் குறைவித்துச்

சீராலே மல்கும் சிற்றம்பலமேய
நீரார் சடையானை நித்த லேத்துவார்
தீரா நோயெல்லாம் தீர்தல் திண்ணமே!

கோணா கணையானும் குளிர் தாமரையானும்
காணார் கழல் ஏத்தக் கனலாய் ஓங்கினான்
சேணார் வாழ் தில்லைச் சிற்றம்பலமேத்த
மாணா நோயெல்லாம் வாளா மாயுமே!

பட்டைத் துவராடைப் படிமங் கொண்டாடும்
முட்டைக் கட்டுரை மொழிவ கேளாதே
சிட்டர் வாழ் தில்லைச் சிற்றம்பலமேய
நட்டப் பெருமானை நாளும் தொழுவோமே!

ஞாலத்து உயர் காழி ஞானசம்பந்தன்
சீலத்தார் கொள்கைச் சிற்றம்பலமேய
சூலப் படையானைச் சொன்ன தமிழ்மாலை
கோலத் தாற்பாட வல்லார் நல்லாரே!

திருச்சிற்றம்பலம்!

---

---

**அப்பர் அருளியவை:**

செஞ்சடைக் கற்றை முற்றத்திள நிலா எறிக்கும் சென்னி
நஞ்சடை கண்டனாரைக் காணலா நறவ நாறும்
மஞ்சடை சோலைத் தில்லை மல்கு சிற்றம்பலத்தே
துஞ்சடை இருள் கிழியத் துளங்கு எரியாடுமாறே!

ஏறனாரேறு தம்பாலிள நிலா எறிக்கும் சென்னி
ஆறனாராறு சூடி ஆயிழையாள் ஓர் பாக
நாறு பூஞ்சோலைத் தில்லை நவின்ற சிற்றம்பலத்தே
நீறு மெய்பூசி நின்று நீண்ட எரியாடுமாறே!

சடையனார் சாந்த நீற்றர், தனி நிலா எறிக்கும் சென்னி

உடையனார் உடை தலையில் உண்பதும் பிச்சை ஏற்றுக்
கடிகொள் பூந்தில்லை தன்னுள் கருது சிற்றம்பலத்தே
அடிகழலார்க்க நின்று அனல் எரியாடுமாறே!

பையர வசைத்த அல்குற் பனிநிலா எறிக்கும் சென்னி
மையறிக் கண்ணியாள் மாலும் ஓர் பாகமாகிச்
செய்யரி தில்லை தன்னுள் திகழ்ந்த சிற்றம்பலத்தே
கையெரி வீசி நின்று கனல் எரியாடுமாறே!

ஓதினார் வேதம் வாயால் ஒளிநிலா எறிக்கும் சென்னி
பூதனார் பூதஞ் சூழப் புலி உரி அதளனார் தாம்
நாதனார் தில்லை தன்னுள் நவின்ற சிற்றம்பலத்தே
காதில் வெண்குழைகள் தாழக் கனல் எரி ஆடுமாறே!

ஓருடம்பு இருவராகி ஒளிநிலா எறிக்கும் சென்னி
பாரிடம் பாணி செய்யப் பயின்ற என் பரமமூர்த்தி
காரிடம் தில்லை தன்னுள் கருது சிற்றம்பலத்தே
பேரிடம் பெருக நின்று பிறங்கெரி ஆடுமாறே!

முதற்றனிச் சடையை மூழ்க முகிழ்நிலா எறிக்கும் சென்னி
மதக்களிற்று உரிவை போர்த்த மைந்தரைக் காணலாகும்
மதத்து வண்டறையும் சோலை மல்கு சிற்றம்பலத்தே
கதத்ததோர் அரவம் ஆட கனல் எரி ஆடுமாறே!

மறையனார் மழுவொன்று ஏந்தி மணிநிலா எறிக்கும் சென்னி
இறைவனார் எம்பிரானார் ஏத்துவார் இடர்கள் தீர்ப்பார்
சிறைகொணீர்த் தில்லை தன்னுள் திகழ்ந்த சிற்றம்பலத்தே
அறை கழல் ஆர்க்க நின்று அனல் எரி ஆடுமாறே!

விருத்தனாய்ப் பாலனாகி விரிநிலா எறிக்கும் சென்னி
நிருத்தனார் நிருத்தம் செய்ய நீண்ட புன்சடைகள் தாழக்
கருத்தனார் தில்லை தன்னுள் கருது சிற்றம்பலத்தே
அருத்தமா மேனி தன்னோடு அனல் எரி ஆடுமாறே!

பாலனாய் விருத்தனாகிப் பனிநிலா எறிக்கும் சென்னி
காலனைக் காலால் காய்ந்த கடவுளார் விடை ஒன்று ஏறி

ஞாலமாம் தில்லை தன்னுள் நவின்ற சிற்றம்பலத்தே
நீலஞ்சேர் கண்டனார் தாம் நீண்டெரி ஆடுமாறே!

மதியிலா அரக்கனோடு மாமலை எடுக்க நோக்கி
நெதியன் தோள் நெரிய ஊன்றி நீடிரும் பொழில்கள் சூழ்ந்த
மதியந்தோய் தில்லை தன்னுள் மல்கு சிற்றம்பலத்தே
அதிசயம் போல நின்று அனல் எரி ஆடுமாறே!

திருச்சிற்றம்பலம்!

---

பத்தனாய்ப் பாட மாட்டேன் பரமனே பரம யோகீ
எத்தினாற் பத்தி செய்கேன் என்னை நீ இகழ வேண்டாம்
முத்தனே முதல்வா தில்லை அம்பலத்தாடுகின்ற
அத்தா உன் ஆடல் காண்பான் அடியனேன் வந்தவாறே!

கருத்தனாய்ப் பாட மாட்டேன் காம்பன தோளி பங்கா
ஒருத்தரால் அறிய ஒண்ணாத் திருவுரு உடைய சோதீ
திருத்தமாந் தில்லை தன்னுள் திகழ்ந்த சிற்றம்பலத்தே
நிருத்தம் நான் காண வேண்டி நேர்பட வந்தவாறே!

கேட்டிலேன் கிளை பிரியேன் கேட்குமா கேட்டியாகில்
நாட்டினேன் நின்றன் பாதம் நடுப்பட நெஞ்சினுள்ளே
மாட்டினீர் வாளை பாயும் மல்கு சிற்றம்பலத்தே
கூட்டமாங் குவிமுலையாள் கூட நீ ஆடுமாறே!

சிந்தையைத் திகைப்பியாதே செறிவுடைய அடிமை செய்ய
எந்தை நீ அருளிச் செய்யாய் யாது நான் செய்வதென்னே?
செந்தியார் வேள்வி ஓவாத் தில்லைச் சிற்றம்பலத்தே
அந்தியும் பகலும் ஆட அடியிணை அலசுங் கொல்லோ?!

கண்டவா திரிந்து நாளும் கருத்தினால் நின்றன் பாதம்
கொண்டிருந்து ஆடிப்பாடிக் கூடுவன் குறிப்பினாலே
வண்டு பண் பாடும் சோலை மல்கு சிற்றம்பலத்தே
எண்டிசையோரும் ஏத்த இறைவ நீ ஆடுமாறே!

பாத்திருந்தடியனேன் நான் பரவுவன் பாடி ஆடி
மூர்த்தியே என்பன் உன்னை மூவரில் முதல்வன் என்பன்
ஏத்துவார் இடர்கள் தீர்ப்பாய் தில்லைச் சிற்றம்பலத்துக்
கூத்தா உன் கூத்துக் காண்பான் கூட நான் வந்தவாறே!

பொய்யினைத் தவிர விட்டுப் புறமலா அடிமை செய்ய
ஐய நீ அருளிச் செய்யாய்! ஆதியாய் ஆதி மூர்த்தி!
வையகம் தன்னில் மிக்க மல்கு சிற்றம்பலத்தே
பைய நின் ஆடல் காண்பான் பரம நான் வந்தவாறே!

மனத்தினார் திகைத்து நாளும் மாண்பலா நெறிகண் மேலே
கனைப்பரால் என் செய்கேனோ கறை அணி கண்டத்தானே!
தினைத்தனை வேதம் குன்றாத் தில்லைச் சிற்றம்பலத்தே
அனைத்து நின் நிலயங் காண்பாந் அடியனேன் வந்தவாறே!

நெஞ்சினைத் தூய்மை செய்து நினைக்குமா நினைப்பியாதே
வஞ்சமே செய்தியாலோ வானவர் தலைவனே! நீ
மஞ்சடை சோலைத் தில்லை மல்கு சிற்றம்பலத்தே
அஞ்சொலாள் காண நின்று அழக நீ ஆடுமாறே!

மண்ணுண்ட மாலவனும் மலர்மிசை மன்னினானும்
விண்ணுண்ட திருவுருவம் விரும்பினார் காண மாட்டாத்
திண்ணுண்ட திருவே மிக்க தில்லைச் சிற்றம்பலத்தே
பண்ணுண்ட பாடலோடும் பரம நீ ஆடுமாறே!

திருச்சிற்றம்பலம்!

---

---

பாளையுடைக் கமுகு ஓங்கிப் பன்மாட நெருங்கி எங்கும்
வாளை உடைப் புனல் வந்தெறி வாழ் வயல் தில்லை தன்னுள்
ஆளவுடைக் கழல் சிற்றம்பலத்து அரன் ஆடல் கண்டால்
பீளையுடைக் கண்களால் பின்னைப் பேய்த் தொண்டர் காண்பதென்னே?!

பொருவிடை ஒன்றுடைப் புண்ணிய மூர்த்தி புலியதளன்
உருவுடையம் மலைமங்கை மணாளன் உலகுக்கு எல்லாம்

திருவுடைய அந்தணர் வாழ்கின்ற தில்லைச் சிற்றம்பலவன்
திருவடியைக் கண்ட கண் கொண்டு மற்றுனிக் காண்பதென்னே?!

தொடுத்த மலரொடு தூபமும் சாந்தும் கொண்டு எப்பொழுதும்
அடுத்து வணங்கும் அயனொடு மாலுக்கும் காண்பரியான்
பொடிக் கொண்டு அணிந்து பொன்னாகிய தில்லைச் சிற்றம்பலவன்
உடுத்த துகில் கண்ட கண் கொண்டு மற்றிக் காண்பது என்னே?!

வைச்ச பொருணமக் காகும் என்று எண்ணி நமச்சிவாய
அச்சம் ஒழிந்தேன், அணி தில்லை அம்பலத்தாடுகின்ற
பிச்சன் பிறப்பிலி பேர் நந்தி உந்தியின் மேலசைத்த
கச்சின் அழகு கண்டாற் பின்னைக் கண்கொண்டு காண்பது என்னே?!

செய்ஞ்ஞின்ற நீலமலர்கின்ற தில்லைச் சிற்றம்பலவன்
மைஞ்ஞின்ற ஒண்கண் மலைமகள் கண்டு மகிழ்ந்து நிற்க
நெய்ஞ்ஞின்று எரியும் விளக்கொத்த நீல மணிமிடற்றான்
கைஞ்ஞின்ற ஆடல் கண்டாற்பின்னைக் கண்கொண்டு காண்பது என்னே?!

ஊனத்தை நீக்கி உலகறிய என்னை ஆட்கொண்டவன்
தேன் ஒத்த எனக்கு இனியான் தில்லைச் சிற்றம்பலவன் என் கோன்!
வானத்தவர் உய்ய வன்னஞ்சை உண்ட கண்டத்திலங்கும்
ஏனத்து எயிறு கண்டாற்பின்னைக் கண்கொண்டு காண்பது என்னே?!

தெரித்த கணையால் திரிபுரம் மூன்றும் செந்தீயின் மூழ்க
எரித்த இறைவன் இமையவர் கோமான் இணை அடிகள்
தரித்த மனத்தவர் வாழ்கின்ற தில்லைச் சிற்றம்பலவன்
சிரித்த முகம் கண்ட கண் கொண்டு மற்றினிக் காண்பது என்னே?!

சுற்றும் அமரர் சுரபதி நின் திருப்பாதம் அல்லால்
பற்று ஒன்றிலோம் என்றழைப்பப் பரவையுள் நஞ்சை உண்டான்
செற்றங்க நங்கனைத் தீவிழித்தான் தில்லை அம்பலவன்
நெற்றியில் கண் கண்ட கண் கொண்டு மற்றினிக் காண்பது என்னே?!

சித்தத்து எழுந்த செழுங்கமலத்து அன்ன சேவடிகள்
வைத்த மனத்தவர் வாழ்கின்ற தில்லைச் சிற்றம்பலவன்
முத்தும் வயிரமும் மாணிக்கமும் தன்னுள் விளங்கிய

தூமத்த மலர்கண்ட கண் கொண்டு மற்றினிக் காண்பது என்னே?!

தருக்கு மிகுத்துத் தன் தோள் வலியுன்னி தடவரையை
வரைக்கைகளால் எடுத்தார்ப்ப மலைமகள் கோன் சிரித்து
அரக்கன் மணிமுடி பத்து மணிதில்லை அம்பலவன்
நெருக்கி மிதித்த விரல்கண்ட கண்கொண்டு காண்பது என்னே?!

திருச்சிற்றம்பலம்!!!

---

கருநட்ட கண்டனை அண்டத் தலைவனைக் கற்பகத்தைச்
செருநட்ட மும்மதில் எய்ய வல்லானைச் செந்தீ முழங்கத்
திருநட்டம் ஆடியைத் தில்லைக்கு இறையைச் சிற்றம்பலத்துப்
பெருநட்டம் ஆடியை வானவர் கோன் என்று வாழ்த்துவனே!

ஒன்றி இருந்து நினைமின்கள்! உந்தமக்கு ஊனம் இல்லைக்
கன்றிய காலனைக் காலால் கடிந்தான் அடியவற்காச்
சென்று தொழுமின்கள்! தில்லையுள் சிற்றம்பலத்து நட்டம்
என்று வந்தாய் என்னும் எம்பெருமான் தன் திருக்குறிப்பே!

கன்மனவீர்! கழியும் கருத்தே சொல்லிக் காண்பது என்னே?
நன்மனவர் நவில் தில்லையுள் சிற்றம்பலத்து நட்டம்
பொன்மலையில் வெள்ளிக் குன்றது போலப் பொலிந்து இலங்கி
என்மனமே ஒன்றிப் புக்கனன் போந்த சுவடு இல்லையே!

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால்
மனித்த பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே!?

வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்!
பார்த்தற்குப் பாசுபதம் அருள் செய்தவன் பத்தருள்ளீர்
கோத்தன்று முப்புரம் தீவளைத்தான் தில்லை அம்பலத்துக்
கூத்தனுக்கு ஆட்பட்டிருப்பதன்றோ நந்தங் கூழைமையே!

பூத்தன பொற்சடை பொன்போன் மிளிரப் புரிகணங்கள்
ஆர்த்தன கொட்டி அரித்தன பல்குறட் பூத கணம்
தேத்தென என்றிசை வண்டுகள் பாடு சிற்றம்பலத்துக்
கூத்தனிற் கூத்து வல்லாருளரோ? என்றன் கோல்வளைக்கே?

முடி கொண்ட மத்தமும் முக்கண்ணின் நோக்கு முறுவலிப்பும்
துடிகொண்ட கையும் துதைந்த வெண்ணீறும் சுரிகுழலாள்
படிகொண்ட பாகமும் பாய்புலித் தோலும் என் பாவி நெஞ்சில்
குடி கொண்டவா தில்லை அம்பலக் கூத்தன் குரை கழலே!

படைக்கலமாக உன் நாமத்தெழுத்தஞ்சென் நாவில் கொண்டேன்
இடைக்கலம் அல்லேன்! எழு பிறப்பும் உனக்காட் செய்கின்றேன்
துடைக்கினும் போகேன்! தொழுது வணங்கித் தூநீறணிந்து உன்
அடைக்கலம் கண்டாய் அணி தில்லைச் சிற்றம்பலத்து அரனே!

பொன் ஒத்த மேனிமேல் வெண்ணீறணிந்து புரிசடைகள்
மின்னொத்து இலங்கப் பலிதேர்ந்துழலும் விடங்கவேடச்
சின்னத்தினால் மலி தில்லையுள் சிற்றம்பலத்து நட்டம்
என்னத்தன் ஆடல் கண்டு இன்புற்றதால் இவ்விருநிலமே!

சாடவெடுத்தது தக்கன்றன் வேள்வியில் சந்திரனை
வீட எடுத்தது காலனை நாரணன் நான்முகனும்
தேட எடுத்தது தில்லையுள் சிற்றம்பலத்து நட்டம்
ஆட எடுத்திட்ட பாதம் அன்றோ நம்மை ஆட்கொண்டதே!

திருச்சிற்றம்பலம்!!!

---

அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கும்ம் மேலும் இப்பூமிசை
என்னம் பாலிக்குமாறு கண்டு இன்புற
இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே?

அரும் பற்றப்பட ஆய்மலர் கொண்டு நீர்
சுரும்பற்றப்படத் தூவித் தொழுமினோ
கரும்பற்றச் சிலைக் காமனைக் காய்ந்தவன்

பெரும்பற்றப்புலியூர் எம்பிரானையே!

அரிச்சுற்ற வினையால் அடர்ப்புண்டு நீர்
எரிச்சுற்றக் கிடந்தார் என்றயலவர்
சிரிச்சுற்றுப் பலபேசப்படாமுனம்
திருச்சிற்றம்பலம் சென்றடைந்து உய்மினே!

அல்லன் என் செயும்? அருவினை என்செயும்?
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செயும்?
தில்லை மாநகர்ச் சிற்றம்பலவனார்க்கு
எல்லை இல்லதோர் அடிமை பூண்டேனுக்கே!

ஊனில் ஆவி உயிர்க்கும் பொழுதெல்லாம்
நான் நிலாவி இருப்பன் என்னாதனைத்
தேன் நிலாவிய சிற்றம்பலவனார்
வான் நிலாவி இருக்கவும் வைப்பரே!

சிட்டர் வானவர் சென்று வரங்கொளும்
சிட்டர் வாழ்தில்லைச் சிற்றம்பலத்துறை
சிட்டன் சேவடி கை தொழச் செல்லும்
அச்சிட்டர் பாலணுகான் செறுகாலனே!

ஒருத்தனார் உலகங்கட்கு ஒருசுடர்
திருத்தனார் தில்லை சிற்றம்பலவனார்
விருத்தனார் இளையார் விடம் உண்ட எம்
அருத்தனார் அடியாரை அறிவரே!

விண் நிறைந்ததோர் வெவ்வழல் இன்னுரு
எண் நிறைந்த இருவர்க்கறி ஒண்ணாக்
கண் நிறைந்த கடி பொழில் அம்பலத்துள்
நிறைந்து நின்றாடும் ஒருவனே!

வில்லை வட்டப் படவாங்கி அவுணர்தம்
வல்லை வட்டம் மதில் மூன்றுடன் மாய்த்தவன்
தில்லை வட்டந் திசை கைதொழுவார் வினை
ஒல்லை வட்டங் கடந்தொடுதல் உண்மையே!

நாடி நாரணன் நான்முகன் என்றிவர்
தேடியும் திரிந்தும் காணவல்லரோ?
மாடமாளிகை சூழ் தில்லை அம்பலத்தாடி
பாதம் என் நெஞ்சுள் இருக்கவே!

மதுரவாய்மொழி மங்கையோர் பங்கினன்
சதுரன் சிற்றம்பலவன் திருமலை
அதிர ஆர்த்தெடுத்தான் முடிபத்திற
மிதிகொள் சேவடி சென்றடைந்து உய்மினே!

திருச்சிற்றம்பலம்!!!

---

பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்
நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்
அனைத்தும் வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்தனைப் பொழுதும் மறந்துய்வனோ!

தீர்த்தனைச் சிவனைச் சிவலோகனை
மூர்த்தியை முதலாய ஒருவனைப்
பார்த்தனுக்கு அருள் செய்த சிற்றம்பலக்
கூத்தனைக் கொடியேன் மறந்துய்வனோ!

கட்டும் பாம்பும் கபாலங்கை மான்மறி
இட்டமாய் இடுகாட்டெரி ஆடுவான்
சிட்டர் வாழ்தில்லை அம்பலக் கூத்தனை
எள்கனைப் பொழுதும் மறந்துயவனோ?!

மாணி பால் கறந்தாட்டி வழிபட
நீணுலகெலாம் ஆளக் கொடுத்த என்
ஆணியைச் செம்பொன் அம்பலத்துள் நின்ற
தாணு வைத்தமியேன் மறந்து உய்வனோ?

பித்தனைப் பெருங் காடு அரவும் காவுடை

முத்தனை முளை வெண்மதி சூடியைச்
சித்தனைச் செம்பொன் அம்பலத்துள் நின்ற
அத்தனை அடியேன் மறந்து உய்வனோ?

நீதியை நிறைவை மறை நான்குடன்
ஓதியை ஒருவர்க்கும் அறிய ஒண்ணாச்
சோதியைச் சுடர் செம்பொன் அம்பலத்து
ஆதியை அடியேன் மறந்து உய்வேனோ?

மைகொள் கண்டன் எண் தோளன் முக்கண்ணினன்
பைகொள் பாம்பரை ஆர்த்த பரமனார்
செய்ய மாதுரை சிற்றம்பலத்து எங்கள்
ஐயனை அடியேன் மறந்து உய்வனோ?

முழுதும் வானுலகத்துள தேவர்கள்
தொழுதும் போற்றியும் தூய செம்பொன்னினால்
எழுதி மேய்ந்த சிற்றம்பலக் கூத்தனை
இழுதையேன் மறந்து எங்ஙனம் உய்வனோ?

காருலா மலர்க் கொன்றையந் தாரனை
வாருலாமுலை மங்கை மணாளனைத்
தேருலாவிய தில்லையுள் கூத்தனை
ஆர்கிலா அமுதை மறந்து உய்வனோ?

ஓங்கு மால்வரை ஏந்தலுற்றான் சிரம்
வீங்கி விம்முற ஊன்றிய தாளினான்
தேங்கு நீர்வயல்சூழ் தில்லைக் கூத்தனைப்
பாங்கிலாத் தொண்டனேன் மறந்து உய்வனோ?

திருச்சிற்றம்பலம்!!!

---

அரியானை அந்தணர்தம் சிந்தையானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்

திகழ் ஒளியைத் தேவர்கள் த‘க்கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே!

கற்றானைக் கங்கைவார் சடையான் தன்னைக்
காவிரிசூழ் வலஞ்சுழியும் கருதினானை
அற்றார்க்கும் அலந்தார்க்கும் அருள் செய்வானை
ஆரூரும் புகுவானை அறிந்தோம் அன்றே!
மற்றாரும் தன்னொப்பார் இல்லாதானை
வானவர்கள் எப்பொழுதும் வணங்கி ஏத்தப்
பெற்றானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே!

கருமானின் உரி அதளே உடையா வீக்கிக்
கனைகழல்கள் கலந்தொலிப்ப அனல் கை ஏந்தி
வருமானத் திரள் தோள்கள் மட்டித்து ஆட
வளர்மதியம் சடைக்கு அணிந்து மானேர் நோக்கி
அருமான வாண்முகத்தாளமர்ந்து காண
அமரர்கணம் முடி வணங்க ஆடுகின்ற
பெருமானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே!

அருந்தவர்கள் தொழுது ஏத்தும் அப்பன் தன்னை
அமரர்கள் தம் பெருமானை அரனை மூவா
மருந்து அமரர்க்கு அருள் புரிந்த மைந்தன் தன்னை
மறிகடலும் குலவரையும் மண்ணும் விண்ணும்
திருந்தொளிய தாரகையும் திசைகள் எட்டும்
திரிசுடர்கள் ஓரிரண்டும் பிறவுமாய
பெருந்தகையைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே!

அருந்துணையை அடியார்தம் அல்லல் தீர்க்கும்
அருமருந்தை அகல் ஞாலத்து அகத்துள் தோன்றி
வருந்துணையும் சுற்றமும் பற்றும் விட்டு

வான் புலன்கள் அகத்தடக்கி மடவாரோடும்
பொருந்தணைமேல் வரும் பயனைப் போகமாற்றிப்
பொதுநீக்கித் தனைநினைய வல்லோர்க்கு என்றும்
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே!

கரும்பமரும் மொழிமடவாள் பங்கன் தன்னைக்
கனவயிரக் குன்றனைய காட்சி யானை
அரும்பரும் பூங்கொன்றைத் தாரான் தன்னை
அருமறையோடு ஆறங்கம் ஆயினானைச்
சுரும்பமரும் கடிபொழில்கள் சூழ்தென் ஆரூர்ச்
சுடர்க்கொழுந்தைத் துளக்கில்லா விளக்கை மிக்க
பெரும்பொருளைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே!

வரும்பயனை எழு நரம்பின் ஓசையானை
வரை சிலையா வானவர்கள் முயன்ற வாளி
அரும்பயஞ் செயவுணர் புரம் எரிக்கக் கோத்த
அம்மானை அலை கடல் நஞ்சயின்றான் தன்னைச்
சுரும்பமரும் குழல் மடவார் கடைக்கண் நோக்கில்
துளங்காத சிந்தையராய்த் துறந்தோர் உள்ளப்
பெரும்பயனைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே!

காரானை ஈருரிவைப் போர்வையானைக்
காமரு பூங்கச்சி ஏகம்பன் தன்னை
யாரேனும் அடியவர்கட்கு அணியான் தன்னை
அரமர்களுக்கு அறிவரிய அளவிலானைப்
பாரோரும் விண்ணோரும் பணிய நட்டம்
பயில்கின்ற பரஞ்சுடரைப் பரனை எண்ணில்
பேரானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே!

முற்றாத பால்மதியம் சூடினானை
மூவுலகும் தானாய முதல்வன் தன்னைச்
செற்றார்கள் புரம் மூன்றும் செற்றான் தன்னைத்

திகழ் ஒளியை மரகதத்தைத் தேனைப் பாலை
குற்றாலத்து அமர்ந்து உறையும் குழகன் தன்னைக்
கூத்தாட வல்லானைக் கோனை ஞானம்
பெற்றானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே!

காரொளிய திருமேனிச் செங்கண் மாலும்
கடிகமலத் திருந்தவனும் காணா வண்ணம்
சீரொளிய தழல் பிழம்பாய் நின்ற தொல்லைத்
திகழ் ஒளியைச் சிந்தைதனை மயக்கம் தீர்க்கும்
ஏரொளியை இருநிலனும் விசும்பும் விண்ணும்
ஏழுலகும் கடந்தண்டத் தப்பால் நின்ற
பேரொளியைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே!

திருச்சிற்றமபம்!!!

---

மங்குன் மதிதவழும் மாட வீதி
மயிலாப்பிலுள்ளார் மருகல் உற்றார்
கொங்கில் கொடுமுடியாற் குற்றாலத்தார்
குடமூக்கின் உள்ளார் போய்க் கொள்ளம் பூதூர்
தங்கும் இடம் அறியார் சால நாளார்
தருமபுரத்து உள்ளார் தக்களூரார்
பொங்கு வெண்ணீறணிந்து பூதம் சூழப்
புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார் தாமே!

நாகம் அரைக்கு அசைத்த நம்பர் இந்நாள்
நனிப்பள்ளி உள்ளார் போய் நல்லூர் தங்கிப்
பாகப் பொழுது எல்லாம் பாசூர் தங்கிப்
பரிதி நியமத்தார் பன்னிரு நாள்
வேதமும் வேள்விப் புகையும் ஓவா
விரிநீர் மிழலை எழுநாள் தங்கிப்
போகமும் பொய்யாப் பொருளும் ஆனார்
புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார் தாமே!

துறங்காட்டி எல்லாம் விரித்தார் போலும்
தூமதியும் பாம்பும் உடையார் போலும்
மறங்காட்டி மும்மதிலும் எய்தார் போலும்
மந்திரமும் தந்திரமும் தாமே போலும்
அறங்காட்டி அந்தணர்க்கு அன்று ஆல நீழல்
அறம் அருளிச் செய்த அரனார் இந்நாள்
புறங்காட்டு எரி ஆடிப் பூதம் சூழப்
புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார் தாமே!

வாரேறு வனமுலையாள் பாகமாக
மழுவாள் கை ஏந்தி மயானத்து ஆடிச்
சீரேறு தண்வயல் சூழ் ஓத வேலித்
திருவாஞ்சியத்தார் திருநள்ளாற்றார்
காரேறு கண்டத்தார் காமற் காய்ந்த
கண் விளங்கு நெற்றியார் கடல் நஞ்சுண்டார்
போரேறு தாமேறிப் பூதம் சூழப்
புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார் தாமே!

காரார் கமழ் கொன்றைக் கண்ணி சூடிக்
கபாலம் கை ஏந்திக் கணங்கள் பாட
ஊரார் இடும் பிச்சை கொண்டு உழலும்
உத்தமராய் நின்ற ஒருவனார் தாம்
சீரார் கழல் வணங்கும் தேவதேவர்
திருவாரூர்த் திருமூலட்டானம் மேயார்
போரார் விடை ஏறிப் பூதம் சூழப்
புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார் தாமே!

காதார் குழையினர் கட்டங் கூத்தர்
கயிலாய மாமலையார் காரோணத்தார்
மூதாயர் மூதாதை இல்லார் போலும்
முதலும் இறுதியும் தாமே போலும்
மாதாய மாதர் மகிழ அன்று
வன்மதவேள் தன்னுடலம் காய்ந்தார் இந்நாள்
போதார் சடைதாழப் பூதம் சூழப்
புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார் தாமே!

இறந்தார்க்கும் என்றும் இறவாதார்க்கும்
இமையவர்க்கும் ஏகமாய் நின்று சென்று
பிறந்தார்க்கும் என்றும் பிறவாதார்க்கும்
பெரியான் தன் பெருமையே பேச நின்று
மறந்தார் மனத்து ஒன்றும் மருவார் போலும்
மறைக்காட்டு உறையும் மழிவாட் செல்வர்
புறந்தார் சடைதாழப் பூதம் சூழப்
புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார் தாமே!

குலா வெண்தலை மாலை என்பு பூண்டு
குளிர் கொன்றைத் தார் அணிந்து கொல்லேர் ஏறிக்
கலாவெங்களிற்றுரிவைப் போர்வை மூடிக்
கையோடு அனல் ஏந்திக் காடு உறைவார்
நிலா வெண்மதி உரிஞ்ச நீண்ட மாடம்
நிறை வயல் சூழ் நெய்த்தானம் மேய செல்வர்
புலால் வெண்தலை ஏந்திப் பூதம் சூழப்
புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார் தாமே!

சந்தித்த கோவணத்தர் வெண்ணூன் மார்பர்
சங்கரனைக் கண்டீரோ கண்டோம் இந்நாள்
பந்தித்த வெள்விடையாய்ப் பாய ஏறிப்
படுதலையில் என்கொலோ ஏந்திக் கொண்டு
வந்திங்கு என் வெள்வளையும் தாமும் எல்லாம்
மணி ஆரூர் நின்று அந்தி கொள்ளக் கொள்ளப்
பொன்றீ மணிவிளக்குப் பூதம் பற்றப்
புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார் தாமே!

பாதங்கள் நல்லார் பரவி ஏத்தப்
பத்திமையால் பணி செய்யும் தொண்டர் தங்கள்
ஏதங்கள் தீர இருந்தார் போலும்
எழுபிறப்பும் ஆளுடைய ஈசனார் தாம்
வேதங்கள் ஓதி ஓர் வீணை ஏந்தி
விடை ஒன்று தாம் ஏறி வேதகீதர்
பூதங்கள் சூழப் புலித்தோல் வீக்கிப்
புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார் தாமே!

பட்டு உடுத்துத் தோல் போர்த்துப் பால்பு ஒன்று ஆர்த்துப்
பகவனார் பாரிடங்கள் சூழ நட்டம்
சிட்டராய்த் தீ ஏந்திச் செல்வார் தம்மைத்
தில்லைச் சிற்றம்பலத்தே கண்டோம் இந்நாள்
விட்டிலங்கு சூலமே வெண்ணூல் உண்டே
ஓதுவதும் வேதமே வீணை உண்டே
கட்டங் கங்கையதே சென்று காணீர்!
கறை சேர் மிடற்று எங்கபாலியார்க்கே!

திருச்சிற்றம்பலம்!!!

---

**சுந்தரர் அருளியவை:**

மடித்தாடும் அடிமைக்கண் அன்றியே மனனே நீ! வாழும்நாளும்
தடுத்தாட்டித் தருமனார் தமர் செக்கிலிடும் தடுத்தாட் கொள்வான்
கடுத்தாடும் கரதலத்தில் தமருகமும் எரியகலும் கரிய பாம்பும்
பிடித்தாடி புலியூர்ச் சிற்றம்பலத்து எம் பெருமானைப் பெற்றாமன்றே!

பேராது காமத்தில் சென்றாற்போலன்றியே பிரியாது உள்கிச்
சீரார்ந்த அன்பராய்ச் சென்றுமுன்னடி வீழும் திருவினாரை
ஓராது தருமனார் தமர் செக்கிலிடும் போது தடுத்து ஆட்கொள்வான்
பேராளர் புலியூர்ச் சிற்றம்பலத்து எம் பெருமானைப் பெற்றாமன்றே!

நரியார் தம் கள்ளத்தால் பக்கான பரிசு ஒழிந்து நாளும் உள்கிப்
பிரியாத அன்பராய்ச் சென்றுமுன் அடி வீழும் சிந்தையாரைத்
தரியாது தருமனார் தமர்செக்கில் இடும் போது தடுத்து ஆட்கொள்வான்
பெரியோர்கள் புலியூர்ச் சிற்றம்பலத்து எம் பெருமானைப் பெற்றாமன்றே!

கருமையார் தருமனார் தமர் நம்மைக் கட்டிய கட்டு அறுப்பிப்பானை
அருமையாம் தன்னுலகம் தருவானை மண்ணுலகம் காவல் பூண்ட
தருவானைத் தருமனார் தமர் செக்கில் இடும்போது தடுத்தாட் கொள்வான்
பெருமானார் புலியூர்ச் சிற்றம்பலத்து எம் பெருமானைப் பெற்றாமன்றே!

கருமானின் உரியாடைச் செஞ்சடை மேல் வெண்மதியக் கண்ணியானை

உருமன்ன கூற்றத்தை உருண்டோட உதைத்து உகந்து உலவா இன்பம்
தருவானைத் தருமனார் தமர் சிக்கில் இடும் போது தடுத்தாட் கொள்வான்
பெருமானார் புலியூர்ச் சிற்றம்பலத்து எம் பெருமானைப் பெற்றாமன்றே!

உய்த்தாடித் திரியாதே உள்ளமே ஒழி கண்டாய் ஊன் கணோட்டம்
எத்தாலும் குறைவில்லை என்பர் காண் நெஞ்சமே! நம்மை நாளும்
பைத்தாடும் அரவினன் படர்சடையன் பரஞ்சோதி பாவம் தீர்க்கும்
பித்தாடி புலியூர்ச் சிற்றம்பலத்து எம் பெருமானைப் பெற்றாமன்றே!

முட்டாத முச்சந்தி மூவாயிரவர்க்கு மூர்த்தி என்னப்
பட்டானைப் பத்தராய்ப் பாவிப்பார் பாவமும் வினையும் போக
விட்டானை மலை எடுத்த இராவணனைத் தலைபத்தும் நெரியக் காலால்
தொட்டானைப் புலியூர்ச் சிற்றம்பலத்து எம் பெருமானைப் பெற்றாமன்றே!

கல்தானும் குழையுமாறு அன்றியே கருதுமா கரதகிற்றார்க்கு
எற்றாலும் குறைவில்லை என்பர் என்பர் காண் உள்ளமே நம்மை நாளும்
செற்றாடித் தருமனார் தமர் செக்கில் இடும் போது தடுத்தாட் கொள்வான்
பெற்றேறிப் புலியூர்ச் சிற்றம்பலத்து எம் பெருமானைப் பெற்றாமன்றே!

நாடுடைய நாதன்பால் நன்றென்றுஞ் செய்மனமே! நம்மை நாளும்
தாடுடைய தருமனார் தமர் செக்கில் இடும் போது தடுத்தாட் கொள்வான்
மோடுடைய சமணர்களும் முடையுடைய சாக்கியர்களும் மூடம் வைத்த
பீடுடைய புலியூர்ச் சிற்றம்பலத்து எம் பெருமானைப் பெற்றாமன்றே!

பாரூரும் அரவல்கு உமை நங்கை அவள் பங்கன் பைங்கண் ஏற்றன்
ஊரூரன் தருமனார் தமர் செக்கில் இடும் போது தடுத்தாட் கொள்வான்
ஆரூரன் தம்பிரான் ஆரூரன் மீகொங்கில் அணிகாஞ்சிவாய்ப்
பேரூரர் பெருமானைப் புலியூர்ச் சிற்றம்பலத்து எம் பெருமானைப் பெற்றாமன்றே!

திருச்சிற்றம்பலம்!!!

---